# Chapter - 13 - Speech for 13th August 2022 – Contd.2

இந்த கூடலிலும் Divine Maya-விற்காக நான் எடுத்த குறிப்புகளில் இருந்தே பேசுகிறேன். அடுத்த அத்தியாயத்திற்கு செல்லலாம் என்றுதான் சென்ற கூடலில் கூறினேன். என்றாலும் கர்மயோகி பொது புத்தி - common sense - என்பதை Consciousness Approach to Management கட்டுரைகளில் சொல்லும் ஒரு விளக்கமான - common sense is to give our best in all times, that is possible only when we have ideals all the time. பொது புத்தி என்பது எந்த ஒரு நொடியிலும் நாம் அறிந்த உயர்ந்த கொள்கை செயல்படுவது என்ற விளக்கத்தின் பார்வையில் பார்க்கிறேன். இந்த Divine Maya அத்தியாயத்தில் அறியாமை என்பது தெரியாதது அல்ல, புரியாதது அல்ல, நாம் அறிந்த உயர்ந்த நிலையில் நின்று உயர்ந்த ஞானத்தை பயன்படுத்தி செயல்பட முடியாதது என்று கீழ் நிலை மாயை, மேல் நிலை மாயை, இரண்டுக்கும் நடுவில் இருக்கும் திரையை பற்றி சொல்வதையும், பொருத்திப் பார்க்கிறேன். அப்போது நாம் அவசியம் பெற வேண்டிய common sense பொதுப்புத்தி பற்றி ஏராளமான கருத்துக்கள் தோன்றுகின்றன. அதே போல commonsense is primary coordination within one factor extended to all subtle and gross factors, மேல் மனதிலும் ஆழ் மனதிலும் சூட்சுமத்திலும் உள்ள ஒரு விஷயத்தை நிர்ணயிக்கும் காரணிகளை determining factors பற்றி அவற்றுக்கும் செயல்களுக்கும், சூழல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி நம் உணர்வு புரிந்துக் கொள்வது. இது போன்ற ஏராளமான கருத்துகளுக்கான குறிப்புகள் உள்ளது. அவற்றை அப்படியே விட்டு விட்டு கடந்து போக மனம் இடம் கொடுக்கவில்லை என்பதால், இந்த வாரமும் Divine Maya -வின் தொடர்ச்சியாக சில கருத்துகளை இன்று பகிர்ந்துக் கொள்கிறேன்.

Commonsense என்று நாம் பொதுவாகச் சொல்வதை பொதுப்புத்தி என்று நினைக்கிறோம். பெரும்பாலான சமயங்களில் அது majority view - பெரும்பாலோர் சொல்லும் வழிக்கே என்று எடுத்து கொள்கிறோம்.

உதாரணமாக லஞ்சம் கொடுக்காமல் வாழ்வு நடத்த முடியாது என்பதை பொதுப்புத்தி என்று எடுத்துக்கொள்கிறோம். அதுவே சமுதாயத்தின் வழி என்று நினைக்கிறோம். ஆனால் சமுதாயம், சட்டம், அரசாங்கம், ஆன்மிகம் என்று அனைத்தும் சொல்வது, அதாவது பொதுவான கருத்து லஞ்சம் என்பது தவறு என்பது தான். ஒரு மேலோட்டமான பார்வையை ஞானமாக மாற்றி புரிந்து கொள்கிறோம்.

தெய்வீக மாயை என்னும் Life Divine அத்தியாயத்தில் நமக்கு இப்படி பிரித்துப் பார்க்கத் தெரியாததால் நமக்கு துன்பம் வருகிறது, நாம் பெற நினைக்கும் ஆனந்தத்தை பெற முடியவில்லை என்கிறார் பகவான். இது போன்ற விஷயங்கள் மாயையாக இருப்பதால், அதாவது அதன் சட்டம், காரணம், அது எப்படி நடக்கிறது, ஏன் நடக்கிறது , சிலருக்கு மட்டும் ஏன் நடக்கிறது என்பது புரியாததால் வாழ்வே மாயம் என்கிறோம். அது கீழ்நிலை மாயை. அதன் காரணங்கள் நமக்கு புரிந்து அதன் உயர்நிலைகளை பின்பற்ற முடிந்தால் அது உயர்நிலை மாயை. அதாவது அதுவும் மாயயையே. காரணம் நமக்குத் தெரிந்த - ஜடத்தில், உணர்வில், அறிவில் நமக்குத்  தெரிந்ததை தான் செய்கிறோம். அதனால் அதற்கான வரையறை அதற்கும் உண்டு என்றாலும் அங்கே முன்னேற்றத்திற்கு, வளத்திற்கு ஒரு பெரிய opening  வழி இருக்கிறது என்கிறார் கர்மயோகி.

முன் சொன்ன லஞ்சம் உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். லஞ்சம் இல்லாமல் முடியாது என்று இருக்கிறோம். ஆனால் அது உண்மையா. சிறு சிறு விஷயங்ளில் 500, 1000 தரும் விஷயங்களை  வேண்டுமானால் அது ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனால் college seat , பெரிய contract , election seat  போன்றவற்றில், சற்றே பெரிய நிலைகளில், IT , FCRA , போன்ற நிலைகளில் பணம் மட்டுமே எதையும் சாதிப்பதில்லை. அதை தாண்டி,பதவி, செல்வாக்கு, அதிகாரம் சில நேரங்களில், கட்சி பலம், ஜாதி பலம் தேவைப்படுகிறது. அது புரிந்து இறங்குவது பட்டறிவு என்று எடுத்துக் கொண்டால், அது உயர்ந்த மாயை. என்றாலும் அது சற்றே உயர்ந்த அறிவு. அதையும் மீறி பல நடப்பதில்லை. கோடிக்கணக்கில் சம்பாத்தித்த ஆயிரம் கோடி, பத்தாயிரம் கோடி என்று வைத்து இருப்பவர்கள் ஒரு லட்ஷம், 10 லட்ஷம் கேஸ்களில் கைதாகி, சிறைக்குச் செல்கிறார்கள். சொத்துகள் முடக்கப்படுகின்றன. அவர்களுக்கு தெரியாத ஆட்களா, பலமா, பதவியா, அதிகாரமா என்றாலும் ஏன் பலிக்கவில்லை, ஏன் ஜெயிக்க முடியவில்லை. நம் ஜட உலகில் செயல்படும் சக்திகளைத் தாண்டிய மேலும் சில சக்திகள், சூட்சுமமான விஷயங்கள், சூட்சும சக்திகள் தேவைப்படுகிறது. அது புரிவது ஞானம்,. அது தான் நம்மை, நம் கையிலில்லை, நம்மால் முடியாது நமக்கு ராசி இல்லை, நமக்கு அம்சம் இல்லை என்பது போன்ற நிலைகளில் இருந்து வெளியே கொண்டு வரும். நாம் நினைத்ததை அடைய முடியும். நாம் தேடும் ஆனந்தம் நமக்கு கிடைக்கும்.

அப்படி பெறும் ஞானம் தான் அதையும் அதற்கான விவேகம், பாகுபாடு இவற்றோடு ஒட்டி வெளிப்படும் போது அது  தடையற்ற தொடர்ந்த முன்னேற்றமாக இருக்கிறது.

நாம் ஆனந்தமடைய முடியவில்லை, நாம் நினைத்ததை நடத்திக் கொள்ள முடியவில்லை என்பது நமக்கு எப்போது புரிகிறது அல்லது உணர்கிறோம் என்றால் துன்பம், எரிச்சல், சோகம், அழுகை போன்ற உணர்ச்சிகள் வரும் போது தான். அதன் பின்னால் உள்ளது நம் எதிர்பார்ப்புக்கான ஒரு தடை, ஒரு பிரச்சினை. அந்த பிரச்சினையை ஆராய்வது மட்டுமல்ல, பொதுவாக எல்லா பிரச்சினைக்கும் பின்னாலும் நம் பொதுவான சுபாவம், மனப்பான்மை, அபிப்ராயம் ஒன்று இருக்கும். அதன் சாரம் புரிந்தால், நமக்கு வரும் பிரச்சினைகளில் ஒரு பொதுத்தன்மை இருப்பது தெரியும். நிறைய பிரச்சினைகள் இருந்தாலும் ஒருவருக்கு ஏதாவது ஒன்று பிரதானமாக இருக்கும் (Life Repeats என்று "Life response " பற்றிய கட்டுரைகளில் நிறைய எழுதியிருக்கிறார் கர்மயோகி).

அடிக்கடி உடல் நலக் குறைவு, அல்லது அடிக்கடி வேலையை விடுதல், மாறுதல், குடும்பத்திற்குள் அல்லது அலுவலகத்தில் அடிக்கடி மோதல், பணப் பிரச்சினை என்று ஏதாவது ஒன்றோ இரண்டோ தான் நம் வாழ்வில் பொதுவாக இருக்கும். அதன் சாரத்தைப் புரிந்துக் கொள்வது நம் வாழ்வைப் பற்றிய பொதுபுத்தியை நாம் பெறுவது. அதில் அறியாமையில், ஜடமாக, நாம் நடத்தும் கீழ் நிலை மாயை என்னும் நிலையில் இருந்து அதன் திரையைக் கிழித்து அடுத்த நிலையான மேல் நிலை மாயைக்கு செல்வது. அதன் முழுமையை உணர்ந்து அதன் பின்னால் உள்ள காரணம், சட்டம் புரிவது, உயர் நிலை மாயை. காரணம் அதுவும் நம் புரிதலே என்றாலும் அதில் ஒரு அறிவு, விவேகம், பாகுபாடு, செயல் திறமை சேருகிறது.

அடுத்தது இந்த வாழ்வில் நடக்கும் தளங்களை தாண்டி, சூட்சும தளங்களில் சட்டங்கள் தவறாது செயல்படுவது நமக்குத் புரிய வேண்டும். அதுவே நம் பொதுபுத்தியை முழுமைப்படுத்தும். அப்போது தான், நம் உடல், உணர்வு, மனம் ஆகியவற்றைத் தாண்டி ஆன்மாவையும் ஒரு நேர்கோட்டில் கொண்டு வரும். அது Integral முழுமை என்பதால் ஆரம்பத்தில் பற்றற்ற தன்மையாகவும் - முடிவில் சமநிலை என்னும் நிலையையும் கொடுக்கும். இரண்டுமே துன்பம் நம்மை பாதிக்காத நிலை என்பதால் நம் ஆனந்தம் அங்கே தான் ஆரம்பிக்கிறது. Commonsense என்னும் வார்த்தையின் ஒரு பிரதான விளக்கமாக கர்மயோகி தரும் - That which is common to all senses. நம் உடலின் அனைத்து பாகங்களும், parts of being -ம் ஏற்றுக்கொள்ளும் நிலை அது - அங்கு துன்பம் என்பதே இல்லை என்கிறார்.

முதலில் பிரச்சினையை ஆராயும் முறையை புரிந்துக் கொள்வோம். பின் வாழ்வை பாதிக்கும் பொதுவான சூட்சும சட்டங்களாக கர்மயோகி

சொல்வதை பார்ப்போம். இந்த கூடலுக்கு அதற்கே நேரம் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதற்கு அடுத்ததாக நாம் அறிவு, விவேகம் என்று நினைப்பவற்றிகும் பின்னால் உள்ள பொதுப்புத்தி என்பதை கர்மயோகி பல accomplishment சாதனை பற்றிய கட்டுரைகளில் எழுதியிருப்பதை சராசரியாக நம் வாழ்வில் வருவதை தொகுத்து இருக்கிறேன். இவை எல்லாம் சேர்த்து சுமார் 90 நிமிடங்கள் 1 1/2 அல்லது இரண்டு மணி நேரம் சொற்பொழிவாக திண்டுக்கல் மையத்தில் August 15 அன்று பேச இருக்கிறேன். அதன் பிறகு அது என் வலைதளத்தில் பதிவேற்றப்படும். விருப்பமுள்ளவர்கள் அங்கே படிக்கலாம்.

முதலில் பிரச்சினைகளை ஆராயும் முறை பற்றி, அதன் சாரத்தை புரிந்துக் கொள்வதை பற்றி பாப்போம். பிரச்சினை இல்லாத நாளில்லை. அதை தீர்க்க வேண்டுமானால், பிரச்சினை ஏற்பட்ட அதே நிலையில் இருந்து அதே பார்வையில் சிந்திப்பதை விட்டு, அதன் பின்னணியில் அது வந்ததற்கான சக்தியைக் கண்டுகொள்ள முடிந்தால், அதற்கு எதிரான சக்தியை பயன்படுத்த முடிந்தால், பிரச்சினை ஆனந்தமாக மாறும்.

பிரச்சினை எப்படி வந்தது என்று கேட்க ஆரம்பித்தவுடன், நாம் தான் அதற்கு காரணமாக இருப்போம் என்பது மட்டும் வராது. தானாக வந்தது, எதிர்பாராமல் வந்தது, அவரால், இவரால் வந்தது, சூழலால் வந்தது என்று நாம் காரணம் இல்லை என்பதை வெவ்வேறு வார்த்தைகளில் போட்டுச் சொல்வோம் . அல்லது அதை ஒட்டி சிந்திப்போம். அதாவது அது எப்படி வந்தது, அதன் காரணம், சட்டம், புரியவில்லை என்பதை மறைக்க அப்படி பேசுவோம். அதிலிருந்தே வாழ்வு இப்படிப்பட்ட விஷயங்கள், அறிவு, விவேகம், சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு அதாவது, மனிதர்கள், மனப்பான்மை, சூழல் ஆகியவற்றிக்கு உட்பட்டு ஒரு தவிர்க்க முடியாத சட்டத்திற்கு உட்பட்டே நடக்கிறது என்பது புரியும். அந்த சட்டங்கள் பல. ஏறாத்தாழ 20,000 சட்டங்கள் உள்ளது என்று எழுத ஆரம்பித்து 2000 வரை கர்மயோகி எழுதினார். அவற்றில் சிலவற்றை புரிந்துக் கொண்டாலே வாழ்வில் பல பிரச்சினைளை வர விடாமல் தடுக்க முடியும்.

துன்பம் பிரச்சினை வராமல் தடுக்க முதல் தேவை, அந்த செயலை நிறைவேற்றும் ஆர்வம், அதற்கு உரிய அறிவு, அதற்கான தேவையான படிகள் (sequence), அதன் சட்டங்கள் பற்றிய விவேகம், ஆகியவை இருந்தாலே நமக்கு தடை என்பதே இருக்காது. இதில் ஒன்று குறைந்தாலும் நம் அறியாமையை

சுட்டிக்காட்ட வாழ்வு தடையை ஏற்படுத்தும். அப்படியும் கவனிக்கவில்லை என்றால் துன்பமாக உணர்வைத் தொடும். அந்த பார்வையில் ஆராய்ந்தால், நமக்கு ஏற்கனவே வந்த பிரச்சினைகளை இந்த கோணத்தில் ஆராய்ந்தால், அதில் உள்ள திறமைக்குறைவு, அறிவுக் குறைவு, தகுதிக் குறைவு, குணக் குறைவு தெரியும். அவற்றை ஆராய்ந்தால் நாம் பெற வேண்டிய மனப்பான்மை, அறிவு, ஞானம், விவேகம், பாகுபாடு ஆகியவை புரிந்து, வாழ்வின் முழுமை புரியும். குறைந்த பட்சம் அறிவில் உள்ள குணம், குறை, உணர்வில் உள்ள குறை, செயல் திறனில், உடல் திறனில் உள்ள குறை, குணம், நடத்தையில் உள்ள குறை, முன்பு செய்த தவறின் எதிரொலி, நம் செயல்களை ஒட்டிய பிறர் செயல்களின் தொடர்பு, அதன் தாக்கம், காலத்தே பயிர் செய் என்பது போன்று காலத்தே செய்யாதது, வேண்டுமென்றே தெரிந்தே செய்த தவறுகள் என்று நமக்கு வந்த துன்பத்தின் பின்னணியை நிதானமாக ஆராய்ந்தால் நம்மைப் பற்றி , நம் அறியாமை பற்றி, நம் வரையறை, பிடிவாதம், அகந்தை, கயமை என்று நம்மை பற்றி, நம் வாழ்வைப் பற்றி ஒரு முழுமையான புரிதலைத் தரும். நாம் ஏன் இப்படி இந்த நிலையில் இருக்கிறோம் என்பதற்கான காரணம் முழுமையாக பிடிபடும்.அதிலிருந்து வெளியே வர முடிகிறதோ இல்லையோ, குறைந்த பட்சம் அது பற்றிய தெளிவாவது நமக்கு கிடைக்கும்.

நமக்கு வரும் துன்பங்களை வகைப்படுத்தினால், அதை பெரும்பாலும் நான்கு வகைகளில் அடக்கி விடலாம்.

ஒன்று, நம் நம்பிக்கை குறைவால் வரும் துன்பங்கள். என்னால் முடியாது, என் விதி இவ்வளவு தான், அன்னைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா, என் qualification-க்கு இவ்வளவு தான், என் அறிவுக்கு, என் தகுதிக்கு, என் வயதுக்கு இவ்வளவு தான், இதற்கு மேல் செய்து என்ன பயன் என்ற அவநம்பிக்கைகள் அது ஏற்படுத்தும் தடைகள், முக்கியமானது. தினம், தினம் செய்திகளில், அல்லது நம் வட்டாரத்தில் இதிலிருந்து வெளியே வந்தவர்களை, 60 வயது 80 வயதில் சாதித்தவர்களை பற்றி தெரிந்தாலும் நமக்கு அது போல செய்ய வேண்டும் என்று தோன்றுவதேயில்லை.

அது இரண்டாவது நிலைக்கு நம்மைத் தள்ளுகிறது. அதாவது முன்னேற முயலாததால் வரும் பிரச்சினைகள், வேலை முதல் வியாபாரம் வரை வரும் பிரச்சினைகள், இந்த கட்டத்தில் வரும். திறமை, திறன், செயல் திறன் , நேர்த்தி அதாவது skill , capacity , ability , perfection ஆகியவை செயலில் மட்டுமல்ல , உணர்வில் அதாவது temperament என்று சொல்லப்படும் மனதின் வெளிப்பாடுகளில், நடத்தையில், குணத்தில் நாம் கொண்டு வர வேண்டிய

மாற்றங்களை கொண்டு வராததால், அல்லது கொண்டு வர முயலாததால், வரும் துன்பங்கள்.

இது அடுத்த நிலைக்கு நம்மை தள்ளுகிறது. அதாவது அது நம் மனப்பான்மையை குறுகியதாக்கி, மேலும் சுயநலத்திற்கு தள்ளி, பிறர் நிலை பார்வை, சம நிலை, எதிர்வினை ஆற்றாதது, ஒப்புமை, அதாவது other man point, equality, non-rection , corespondences என்னும் உயர் நிலை மனப்பான்மைகளை பெற  விடாமல் தடுத்து, தற்காப்பு, கயமை, திருட்டுத்தனம், பொறாமை, எரிச்சல், போன்ற falsehood -க்கு மேலும் மேலும் செல்ல வைத்து துன்பத்தை அதிகப்படுத்துகிறது.

மனம், உணர்வு ஆகியவை பாதிக்கப்பட்ட பிறகு அது நம்மை ஜடத்தில் துன்பம் என்னும் நிலைக்குத் தள்ளுகிறது. நாக்கை கட்டுப்படுத்த முடியாதது, எரிச்சல் வந்தால், சோகம் வந்தால், துன்பம் வந்தால், அதிகம் சாப்பிடுவது, ருசிக்காக அளவில்லாமல் சாப்பிடுவது, வேலை பாக்காமல் சாப்பிடுவது, உடற்பயிற்சி செய்யாதது, relaxation என்ற பெயரில் TV seial ஆம்பித்து youTube , Facebook , Instagram  போன்ற அர்த்தமற்ற விஷயங்களில் நேரத்தை செலவழிப்பது, குடிப்பழக்கம், போதை, புகை என்று ஜடத்தை பாதிக்கும், நோய்,வலி ஏற்படுத்தும் விஷங்களில் முடிந்து, அதனால் வரும் துன்பங்களை அனுபவிப்பது.

இந்த நான்கு வகைக்குள் பெரும்பாலும் வாழ்வில் நமக்கு வரும் தடைகளை, துன்பங்களை அடக்கி விட முடியும். இதையெல்லாம் கேட்கும் போதே இப்படி நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரியும். அதற்கான தீர்வும் நமக்குத் தெரியும். எத்தனை முறை சொன்னாலும் அலுக்காத உதாரணம் கர்மயோகி கூறும் உதாரணம்.  எந்த வகை துன்பத்தை,  பிரச்சினையை யார் நம்மிடம் வந்து சொன்னாலும் நாம் தெரியாது என்றே சொல்ல மாட்டோம். நமக்கு தெரிந்த நடைமுறை, சமுதாய முறை, அன்னை முறை என்று விலாவரியாக, வக்கணையாக பேசி விளக்குவோம்.  அதாவது நமக்கு அந்த அளவு தெரியும் என்று பொருள். ஆனால் நமக்கு என்று வரும் போது அதில் 1% கூட செய்ய மாட்டோம். அதனால் தான், நீ ஒரு நாளில் பிறருக்கு செய்யும் advice -ஐ record செய்து வைத்துக் கொள் , பின் கேட்டுப்பார். அவை எல்லாம் உனக்கு நீயே சொல்லிக் கொள்பவை,  நீ செய்ய வேண்டியவை என்பார்.

Half an hour with Mother -இல் இது பற்றி சிந்தித்துப் பார்த்தால்  இதில் உள்ள உண்மை சுடும். நம் துன்பம் அனைத்தும் நாம் உருவாக்கியவை தான் என்பது புரியும். நாம் இதை பிடித்து செய்கிறோம் என்கிறார்.

காரணம் நமக்கு துன்பம் பிடித்திருக்கிறது. அதை பற்றி சிந்திப்பது நமக்கு பிடித்து இருக்கிறது. அது நம்மை energize செய்கிறது. நம்மை, நம் வாழ்வை நாம் நடத்துவதாக ஒரு சுய முக்கியத்துவத்தை, self importance -ஐ தருவதால், நம்மை, நாம் முன்னிறுத்துவதால், அது நமக்கு பிடிக்கிறது. அது நம்மை engaged ஆக வைத்து இருக்கிறது. அதற்கு நாம் செய்யும் முயற்சிகள் ஒரு sense of achievement -ஐ தருகிறது. கொஞ்ச நாள் வாழ்வு எந்த பிரச்சினையும் இல்லாமல் சென்றால் போரடிப்பது போல இருப்பது, ஜீவனற்று இருப்பது போல இருப்பதற்கு காரணம் இது தான். நம் ஒரு அறியாமை, வேறு ஒரு அறியாமையைக் கொண்டு வரும் போது, அது ஒரு புது பிரச்சினையை கொண்டு வரும் போது, நமக்கு ஏதோ வாழ்க்கை வேகமாக போவது போல தோன்றுவதால், அறியாமையே நமக்கு பிடிக்கிறது. அறியாமையை நீ விரும்பி அழைக்கும் போது அறிவு எப்படி உள்ளே வரும் என்று கேட்கிறார் கர்மயோகி.

வாழ்வு பரிணாமத்தில் முன்னேற, தன் ஆழத்தில் இருந்து குரல் எழுப்பும். அது நடைமுறையில் பிரச்சினையாக வந்து நம் கவனத்தை ஈர்க்கும். அதை புரிந்துக் கொள்ள நாம் அதன் ஆழத்தை அறிய வேண்டும். நம் அறியாமையின்  ஆழத்தை அது தெளிவுப் படுத்தும். அந்த தெளிவு நாம் பெற நினைத்த ஆனந்தத்தைத் தரும்.  அந்த தெளிவு முழுமையாக இருந்தால், அது பிரம்ம நோக்கத்தை பரிணாமத்திற்கு தேவையான உயர்சித்ததின் பரிமாணங்களை ஒட்டி இருந்தால், அதுவே வாழ்வில் முன்னேற்றதிற்கான commonsense subtle determinance -கான பொதுப்புத்தி என்கிறார். இதற்கான நடைமுறை உதாரணங்களை இப்போது சொல்ல போகும் பொதுவான சூட்சும சட்டங்கள் பற்றிய பொதுப்புத்தி-commonsense பற்றி பேசிய பிறகு கூறுகிறேன்.

நூறு கோடி என்னும் புத்தகத்தில் கடைசி வரியாக இதிலுள்ள எல்லாவற்றையுமோ , ஏதோ ஒன்றையோ செய்தாலும் பலன் இருக்கும் ஆனால் பொதுபுத்தியை உபயோகப்படுத்தவும் என்று இருக்கும். use commonsense என்று எழுதியிருப்பார். நடைமுறை தேவைகளைத் தாண்டிய சூட்சும விஷயங்களை அதன் சாரத்தை புரிந்துகொள்வதை பொதுப்புத்தி என்பதற்கு உதாரணமாக எட்டு நிகழ்வுகளை கொடுத்து இருப்பார். அதில் ஒன்று குடிப்பழக்கமும் போக்கிரித்தனமும்  கொண்ட ஒருவர் பண்புகளை அதிகமாக வளர்த்துக் கொண்டதால் முன்னேறினார் என்று எழுயிருப்பார். அது நான்.  முகவாதம் வந்து முகம் பழைய நிலைக்குத் திரும்புமா என்று பயத்தில் இருந்த அன்பர் ஒரு நாள் மருத்துவர் ஆலோசனைகளோடு சேர்ந்து இன்னொரு அன்பரை அவர் காதில் விழுமளவு Life Divine படிக்கச் சொன்னார்.

சில நாட்களிலேயே எல்லாம் சரியானது. முகம் பழைய நிலைக்கு வந்தது என்று எழுயிருப்பார். அது என் மனைவி.

எதற்கெடுத்தாலும் பயப்படும் ஒரு அன்பர், அதனால் உயிரை துறக்க வேண்டும் என்னும் நிலைக்கு சென்ற ஒருவர், பின் வாழ்வின் அழுத்தத்தில் தற்செயலாக தைரியமான செயலை செய்ய, அதனால் அந்த area -வில் செல்வாக்கு பெற்ற ஒரு அரசியல்வாதியாக மாறிவிட்டார் என்று எழுதியிருப்பார். அவர் எனக்குத் தெரிந்த ஒரு அன்பர்.

இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் வாழ்வின் சட்டங்கள் என்று இருந்தாலும், அதை தாண்டி சில சக்திகள், சட்டங்கள் செயல்பட்டே அதற்கான மறுமொழியை கொடுக்கிறது. அதை நாம் புரிந்துக் கொள்ளும் அளவிற்கு நாம் முன்னேறுகிறோம். நமக்கு நிம்மதி என்பதில் ஆரம்பித்து, ஆனந்தம் என்பது வரை அப்போதே கிடைக்கிறது என்கிறார். அதற்கு அடிப்படையான கருத்தாக பலவற்றைக் accomplishment மற்றும் business கட்டுரைகளில் கூறியிருக்கிறார். அவற்றுள் analogy from Life Divine for business என்னும் கட்டுரையில் பிரதானமாக எனக்குப் பட்ட எட்டு கருந்துகளை இங்கே தருகிறேன்.

1) God is the origin. It is His Will is fulfilling in life. இறைவனின் சித்தமே நம் வாழ்வில் வெளிப்படுகிறது.

2) Conscious caution that gives that wisdom and discrimination. அதை உஷார்த்தனமாக விவேகத்தோடும், பாகுபாடோடும் பார்க்கும் விழிப்புணர்வு.

3) Fundamentals cannot be ignored. அடிப்படைகளை செய்யத் தவறக் கூடாது. அதில் எதையும் மிச்சம் வைக்க கூடாது.

4) Personal and Social Limits must be honoured - நம் வரையறைகள் சமுதாய வரையறைகள் நமக்குத் தெரிய வெண்டும்.

5) Life is sustained by great attitude, motives and ideals - வாழ்வு, உயர்ந்த மனப்பான்மை, கொள்கை, நோக்கம் ஆகியவற்றுக்கே சரியான மறுமொழியை கொடுக்கிறது.

6) All acts should be connected to spiritual skills - எல்லா செயல்களும் ஆன்மீக பண்புகளுடன் இணைக்கப் பட வேண்டும்.

7)	Taste of ignorance changing into taste of knowledge is evolution -
அறியாமையின் ருசியில் இருந்து வெளியே வந்து ஞானத்தை பெறுவதே பரிணாமம்.

8)	Society is an integrated live organism. It symbols to be watched - சமுதாயம் நம்மைப் போலவே ஒரு ஜீவனுள்ள படைப்பு. நம்மோடு தொடர்பு கொண்டு அது தரும் சமிஞைகளை கவனிக்க வேண்டும்.

இந்த அடிப்படைகள், அதன் முழுமையான ஞானம் பொதுப்புத்தி common-sense என்கிறார். அது புரிந்தால், எந்த துன்பமும் இல்லாத சமநிலையை தரும் என்கிறார். ஆன்மீகத்தில் அது ஆனந்தம் தரும் நிலை என்று சொன்னாலும், வாழ்வில், வியாபாரத்தில், நடைமுறையில் அதை certitude - ஐயமில்லா நிதானம் - ஆனந்தம் என்று குறிப்பிடுகிறார். அதை பெற்றாலே ஆனந்தத்திற்கு தேவையான அனைத்து பண்புகளும் தானே தேடி வரும் என்கிறார் கர்மயோகி.

முதல் கருத்து இறைவனின் சித்தமே நம் வாழ்வில் வெளிப்படுகிறது. நான் பல முறை பல கூடல்களில் சொன்னது போல நாம் யாராக இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பதற்கும், நாம் யாராக இருக்க வேண்டும் என்று இறைவன் நினைப்பதற்கும் நடக்கும் போராட்டம் தான் வாழ்க்கை. அந்த சட்டத்தை பற்றி விழிப்புணர்வு நமக்கு எப்போதும் இருக்க வேண்டியது அதை நம் உடலும், உணர்வும், மனமும் முழுதும் ஏற்றுக் கொண்டு ஆன்மாவை நோக்கி திரும்புவது, நாம் பெற வேண்டிய முதல் பொதுப்புத்தி.

நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், ஏதோ ஒரு படைப்பாற்றல் கொண்ட சக்தியின் நீட்சியாக extension ஆகத் தான் நாம் இருக்கிறோம். அது தன் விருப்பத்திற்கு ஆனந்தப்பட, அது பரிணாமத்தின் மூலம் வெளிப்பட நம்மை உபயோகப்படுத்துகிறது என்பதை தான். அதற்காக அது பல வடிவங்கள், சூழல்கள், செயல்கள், பலன்கள் ஆகியவற்றை உருவாக்குகிறது. அதை நடத்துவது அதன் பிரதிநிதியான ஆன்மா. ஆனால் நாமே, நம் மனமே அதை நடத்துவதாக நம்புவதால் நம் எதிர்பார்ப்பு நடக்கவில்லை என்றால் அது நமக்கு துன்பமாகத் தெரிகிறது. அப்படி இல்லாமல், ஒவ்வொரு தோல்விக்கும் பின் உள்ளது ஒரு இறைவனின் விருப்பம், அதன் காரணம், அதன் சட்டம் புரிந்தால் அதன் வலி நமக்குத் தெரியாது. அதன் பின் உள்ள ஆனந்தம் நமக்குத் தெரியும். அது வாழ்வில் முன்னேற்றமாக வெளிப்படும்.

முரண்பாடே உடன்பாடு, தோல்வியே வெற்றிக்கு அடிப்படை என்பது போன்ற ஏராளமானவற்றை கேள்விப்பட்டு இருப்போம். எடுத்த காரியத்தை ஏதோ ஒரு காரணத்திற்காக விடுதல், வாழ்வின் முரண்பாடுகளை துன்பங்களை எந்த வித சிந்தனையும் இல்லாமல் விதி என்றோ, என் ராசி என்றோ ஏற்று நடந்த இடங்கள், தோற்றத்தை வைத்து, பேச்சை வைத்து, நம்பி நாம் ஏமாந்த இடங்கள், நாம் அறிவு, விவேகம் என்று நினைத்து செய்தது அனைத்தும் தவறாக முடிந்த இடங்கள், நம் நல்லெண்ணத்திற்கு துரோகத்தை பலனாக பெற்ற இடங்கள் ஆகியவற்றை கவனித்தால், அதன் பின்னால் உள்ளது நம் விருப்பம் அல்லது நம் மனம் அல்ல. அதை தாண்டி ஏதோ ஒன்று நடத்துவது தெரியும். அதற்கு ஒரு காரணம்  இருப்பது தெரியும்.

அடுத்து தேவையான பொதுப்புத்தி, . மேலே சொன்னவற்றை கவனத்தோடும், விவேகத்தோடும், பாகுபாடோடும் பார்க்கும் விழிப்புணர்வு. நான் செய்தேன், நான் சாதித்தேனென்று நாம் நினைத்த இடங்களை இன்று இந்த கண்ணோட்டத்துடன் பாரத்தால், இது புரியும். இறைவன் ஒவ்வொன்றிலும் தன்னை எப்படி வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்னும் தெளிவான திட்டத்துடன் உறுதியுடன் இருப்பது தெரியும். ஒரு வலி, ஒரு துன்பம் மூலம் நம்மை அவனை நோக்கித் திருப்புவது புரிந்தால், முதலிலேயே அவன் விரும்பும் மனப்பான்மை, பண்புகளுக்கு மாறிவிட்டால், அது நேரடி ஆனந்தமாக இருக்கும். இல்லையென்றால் வாழ்வில் அடிபட்டே  அதை புரிந்து சரி செய்வோம். நேரமும், உழைப்பும் வீணாவதே பலனாக இருக்கும்.

இதற்கு உதாரணமாக நாம் பிறருக்கு உதவி செய்த இடங்களை எடுத்துக் கொண்டால் , பரோபகாரம், பரிதாபம், பாவம் என்று நாம் செய்த இடங்கள் தவறாது பிரச்சினையை கொண்டு வந்தே இருக்கிறது. அதுவே இறை விருப்பமான  பரிணாமத்தில் முன்னேற்றத்தை ஒட்டி - ஒருவரது சித்தம் உயர, திறமை உயர, மனப்பான்மை உயர நாம் செய்யும் எதுவும் நம் வாழ்விலும் பிறர் வாழ்விலும், முன்னேற்றத்தை மட்டுமே கொடுக்கும். கர்மயோகி அதை மட்டும் செய்தார். மகான் ஆனார். ஒரு செயலில் இறைவனது விருப்பம் எது என்பதில் கவனத்துடன் இருந்து அதற்கான விவேகம், பாகுபாடுடன் செயல்படுவது பொதுப்புத்தி.

அடுத்தது அடிப்படைகளை தவிர்க்கக் கூடாது.  வாழ்வனைத்தும் யோகம் என்பதன் அடைப்படை இது. மரபில் குடும்பம், சமுதாயம் யோகத்திற்கு தடை என்று நினைத்து விலகி சென்றவர்கள் உண்மையில் சந்தர்ப்பம் வந்தால் எதிலும் மாறவில்லை என்பதை பல புராண இதிகாச கதைகளை கவனித்தால்  புரியும். உதாரணமாக ஒரு சராசரி மனிதனானால் வாழ்வின்

சட்டங்களை மதித்து திருமண வாழ்வில் இருந்து தான் ஸந்யாஸத்திற்கு செல்ல வேண்டும். நேரடி ப்ரம்மசர்யம் பயின்றவர் மனநிலை பற்றி கர்மயோகி பல இடங்களில் எழுதி இருக்கிறார். அடிப்படை என்பதை ஒவ்வொன்றின் செயலுக்கான அடிப்படை என்று புரிந்துக் கொண்டு முழுதும் உபயோகப்படுத்த வேண்டும். அது பூர்த்தியான பிறகே அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும். அதன் பொருளை முழுதுமாக புரிந்து நடக்க வேண்டும். அப்போது தான் அது பலன் தரும். இல்லையென்றால் முக்கியமான காலகட்டத்தில் நாம் பின்னோக்கி சென்று அதை பூர்த்தி செய்ய வேண்டி இருக்கும். ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை தவறாக புரிந்துக் கொண்டு படிப்பு தேவையில்லை . Degree தேவையில்லை என்று 35 வயது வரை இருந்த நான் அதன் பிறகு அது இல்லையென்றால் முன்னேற்றம் இல்லை என்பதை புரிந்துக் கொண்டு அந்த வயதில், சிறு வயதினருடன் படித்தது என்பது எனக்கு நரக வேதனை.

அது போன்றது தான், நாம் எடுத்தவுடன் உயர் பண்புகளை எடுத்துக் கொள்வதும். உதாரணமாக non -reaction , non-initiative என்பது மிக உயர்ந்த நிலையில் எடுக்க வேண்டியது. அதாவது அதிகாரம், பதவி, அந்தஸ்து, சக்தி, திறமை, ஆற்றல் என்று அனைத்தும் இருக்கும் போது அதை செய்யாமல் இருப்பது. அது இறைவன் விரும்பும் அகந்தையில் இருந்து வெளியே வரும் பண்பு. அப்படியில்லாமல் அதை அர்த்தமில்லாமல் எடுத்துக் கொண்டால், மனிதர்கள் முதல் வாழ்வு வரை நம் மீது ஏறி நடனமிட்டு விளையாடும். அதற்கு பெயர் அடக்கமல்ல, அடிபணிதல், அதற்கு வாழ்வு பலன் அளிக்காது.

அதே போல தான் சமர்ப்பணம் செய்து விட்டேன் என்று சொல்வதும். முதல் கட்டத்தில், நாம் அறிந்த அனைத்தையும் செய்வது, அடுத்தது அன்னையிடம் சொல்லி விட்டு நாம் அறிந்த அன்னை முறைகள் அனைத்தையும் கொண்டு வந்து செய்வது. அதை விட்டு சமர்ப்பணம் என்று சொல்லிவிட்டு எதுவும் செய்யாமல் இருந்தால், பின் அது கிணற்றில் போட்ட கல் போல இருக்கும். பின் முதலில் இருந்து ஆரம்பித்து நாமே அனைத்தையும் செய்ய வேண்டி வரும்.

அடுத்த பொதுபுத்தியாக நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியது வாழ்வு மனப்பான்மை, நோக்கம், கொள்கை ஆகியவற்றுக்குத்தான் பலன் அளிக்கும் என்பதை நாம் ஆழமாக புரிந்துக் கொள்ள வேண்டும். இதற்கு சாதாரணமாக புரிந்துக் கொள்ளும் உதாரணம், நாம் ஒரு மாடை வெட்டுவதற்கும், ஒரு கசாப்புக்கடைக்காரன் வெட்டுவதற்கும் உள்ள வித்தியாசம். நமக்கு பாவம், புண்ணியம் உண்டு அவனுக்கு கிடையாது. இதை நம் வாழ்வில் வெற்றி

பெற்ற இடங்களை வைத்து பார்த்தால், எளிதாக புரிந்துக் கொள்ளலாம் . அல்லது நாம் ஏற்கனவே செய்து வெற்றி பெற்ற இடங்கள், இன்று தோல்வி அடைந்து இருந்தாலோ, அல்லது நம்மளவு அதே திறமை, சூழல் என்று அனைத்திலும் உள்ள ஒருவர் நம்மை விட அதிக முன்னேற்றம் அடைந்து இருந்தால், அதை கவனித்தால் அவருக்கும் நமக்கும் இருக்கும் வித்தியாசம் மனப்பான்மையிலோ, நோக்கத்திலோ, கொள்கையிலோ தான் இருக்கும்.அவர் எடுத்து இருக்கும் உயர்ந்த நிலைகளை நாம் எடுத்து இருக்க மாட்டோம்.

உதரணமாக மாத சம்பளத்திற்கு வேலை செய்பவரை எடுத்து கொள்வோம். ஒருவர் தன்  கடமையை முழுதும் கடின உழைப்பு  மூலம் செய்கிறார். மற்றொருவர்  நடத்தை , தட்டி கொடுத்து வேலை வாங்குவது , டீம் player என்று சொல்லும் அளவிற்கு சின்சரிட்டி, சுமுகம் போன்ற பண்புகளை கொண்டுவந்து உழைக்கிறார். இன்னொருவர் கம்பெனி உயரவேண்டும் , இந்த பொருள் எல்லோருக்கும் போய்  சேர வேண்டும், நன்கு பலனாக வேண்டும் என்ற ஆர்வத்துடன் செய்கிறார் தனக்கு தெரிந்த உயர்ந்த நிலையில் அனைத்தையும் செய்கிறார். சில ஆண்டுகள் கழித்து பார்த்தால் முதலாமவர் முதலாளி ஆகி இருப்பார் , இரண்டாமவர்  மிக பெரிய தலைமை பொறுப்புக்கு வந்து இருப்பார்.   மூன்றாமவர் பல தொழிலுக்கு அதிபர் ஆகி இருப்பார், தொழில் துறை வளர, நாடு வளர , கருவியாக ஆகிருப்பார் .

இதை மேலும் புரிந்துக் கொள்ளத்தான் Token Act என்னும் முறையை கர்மயோகி தருகிறார். வழக்கமாக செய்யும் ஒன்றை அன்னை விரும்பும் மனப்பான்மை, அன்னையின் பரிணாம நோக்கம், அன்னை விரும்பும் பண்புகள் அடிப்படையில் செய்யும் போது வரும் பலன்களை கவனித்தால், வழக்கமாக நாம் செய்வதற்கும் அன்னை முறைப்படி செய்வதற்கும் உள்ள வித்தியாசம், அதில் வரும் அபரிமிதமான பலன் புரியும். இந்த அடிப்படை புரிவது வெறும் பொதுப்புத்தி மட்டுமல்ல. இதுவே வாழ்வின் முன்னேற்றத்திற்கு, முழுமையான ஞானத்திற்கு பரிணாமத்திற்கு நீயே இறைவனாவதற்கு இதுவே formula என்கிறார்.

அடுத்த பொதுப்புத்தி அப்படி நாம் வாழ்வை பார்க்கும் போது, மனப்பான்மை, நோக்கம் கொள்கையை எடுத்துக் கொள்ளும் போது, நம் வரையறையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.  உதாரணமாக கர்மயோகி எடுத்த நோக்கம், மனப்பான்மை, கொள்கையை நாம் எடுத்தால் அதற்கான பலனையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்.

உதாரணமாக நிர்வாகம் வாழ்வுக்கு உயர்வு, ஆன்மீகத்திற்கு எதிரி என்று தன் ஸ்தாபனத்தை எந்த rule-க்கும் உட்படுத்தாமல், சட்டப்படி செய்ய வேண்டியவைகளைத் தவிர வேறு எதற்கும் உட்படுத்தாமல்  இருந்தார். Thy Will என்று எடுத்துக் கொண்டார். அவை சின்னா பின்னமானாலும் அதை பொறுத்துக் கொண்டார்.  நம் உண்மை நிலை அறிய நம்மைச் சுற்றி தீய சக்தி அவசியம் என்று எழுதி விஷப்பாம்புகளுக்கு பால் வார்த்தார்.  அதனால் அவர் பட்ட வேதனையை நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அவை வளர்ந்து  இன்று அந்த ஸ்தாபனத்தையே கொத்துகிறது.

என்னை எடுத்துக் கொண்டால், பிறருக்கு உதவி செய்தால், பிரார்த்தனை செய்தால் அவர் கர்மத்தை நாம் ஏற்றுக் கொள்வதாகும் என்று எனக்குச் சொல்லப்பட்டதற்கு பயந்து பல வருடங்கள் யாருக்கும் எதுவும் செய்ய மாட்டேன். December 2019-இல் எனக்கு ஒரு accident நடந்த போது ஏராளமானோர்  கூடி எனக்கு முதலுதவி செய்து, மருத்துவமனையில் சேர்த்தது, எங்களை ஏற்றி வந்த auto அதற்கான பணம் வாங்காமல் சென்றது என்பதை பார்த்த போது, நான் மனிதன் என்ற வார்த்தைக்கு அடையாளமாக மனிதாபிமானம் என்பதே இல்லாமல் இத்தனை வருடம் இருந்தது புரிந்தது. அப்படி சொன்னவர்கள் ஒரு நாள் விடாமல் மற்றவர்கள் உதவியை  பெற்று, தான் முன்னேறியது என் கண்ணில் படாத முட்டாள்தனம் எனக்கு அப்போது தான் புரிந்தது. இது போன்று மரபு, சம்பிரதாயம் , கோயில்கள் என்று பலவற்றை சொல்லி என்னை ஏமாற்றிய கூட்டம், தான் தன் குடும்பம், விசேஷங்கள்  என்று மகிழ்ச்சியாக இருக்கும் போது நான் சமுதாயத்தில் ஒட்டாமல் தனியாக நிற்பதன் முட்டாள்தனம் புரிகிறது. இவையெல்லாம் நம்மை விட்டு நம் சித்த உயர்வின் மூலம் விலக வேண்டுமே தவிர நாமே விலக்கக்கூடாது என்பது புரிய வேண்டும். எவற்றை எந்த அளவு செய்ய வேண்டும் என்னும் விவேகம், பாகுபாடு வேண்டும். உயர்நிலைகள் நிச்சயம் பலன் தரும். ஆனால் அதற்கான மன உளைச்சல்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் வேண்டும். சமர்ப்பணன்  அடிக்கடி சொல்வது போல நீ வாழ்வை சமர்ப்பணம் செய்யலாம். ஆனால் உன்னை கட்டி சுண்ணாம்பு காலவாயில் போட்டாலும் , அதுவே Thy Will என்று ஆனந்தப்படும் மனநிலை வேண்டும். அது நம்மால் முடியுமா.  இந்த இடத்தில் இது பற்றி நான் சிந்தித்ததை நான் பகிர்ந்துக்க கொள்ள விரும்புகிறேன். நாமே விலக்க கூடாது. அதுவே விலக வேண்டும் என்பது பற்றி சிந்தித்த போது, தோன்றியது இது. உதாரணமாக எனக்கு யாராவது திருமண, பத்திரிகை கொடுத்தால் அவசியம் வர வேண்டும்  என்று நினைப்பார்கள்.  செல்லவில்லை என்றால் மன வருத்தம் வரும். ஆனால் அதுவே அவரே அந்த பத்திரிகையை கர்மயோகிக்கு

தருவதாக இருந்தால், அவர் வந்தே ஆக வேண்டும் என்னும் எதிர்பார்ப்பு இருக்காது. அவருடைய Blessings கிடைத்தால் போதும் அல்லது இந்த பத்திரிகை அவருக்கு கொடுப்பதே பெரும் பாக்கியம் என்று இருக்கும். நம் consciousness வளருவதன் மூலம் தான் எதையும் விலக்க வேண்டும்., அதன் அளவுக்குத்தான் எதையும் செய்ய வேண்டும். இந்த பொதுப்புத்தி நமக்கு மிகவும் முக்கியம்.

அடுத்து அடைய வேண்டிய பொதுப்புத்தி நம் செயல்கள் அனைத்தும் ஒரு ஆன்மீக பண்புடன் இணைக்கப்பட வேண்டும் அல்லது அதை உள்ளடக்கி இருக்க வேண்டும். நம்மை, பிறரும், அல்லது நாம் பிறரை ஒரு பண்புடன் தொடர்பு படுத்தி அடையாளப்படுத்தியே புரிந்துக் கொள்கிறோம். உதாரணமாக நாம் ஒரு ஆசிரியராக இருந்தால், எளிதாக எதையும் புரிய வைக்கும் ஆசிரியர், அன்பான ஆசிரியர், கண்டிப்பான ஆசிரியர், ஆழமாக சொல்லிக் கொடுக்க தெரியாத அல்லது தெரிந்த ஆசிரியர், நல்லெணம்மிக்க ஆசிரியர், மாணவர் நலனை, முன்னேற்றத்தை விரும்பும் ஆசிரியர் என்று பல விதமாக அறியப்படுவோம். அல்லது வியாபாரத்தில் இருந்தால், நேர்மையான வியாபாரி, கறாரான வியாபாரி,வியாபார நோக்கம் மட்டுமே உள்ளவர், வாடிக்கையாளர் முக்கியம் என்று நினைப்பவர், தரமான, பொருள் மட்டுமே தருபவர் , சொன்ன சொல் தவறாதவர், பணத்திற்காக எதையும் செய்பவர் என்று நாம் அடையாளப்படுத்தும் விதங்கள் , அனைத்தையும் கவனித்தால் நம்மை பிறர் உயர்வாக நினைக்கும் இடங்கள் எல்லாம் ஒரு பண்புடன் சம்பந்தப்பட்டே இருக்கும். அதனால் நாம் செயல்களை ஒரு பண்புடன் இணைப்பது நமக்கு அதிகபட்ச முன்னேற்றத்தையும் ஆனந்தத்தையும் தரும். அது எந்த அளவிற்கு உயர் சித்ததுடன் இருக்கிறதோ, அந்த அளவுக்கு நமக்கு பெயர், புகழ், அந்தஸ்து கிடைக்கும். அதற்கு உதாரணமாக அரசியவாதிகள் அல்லது சமூக விரோதிகள் ஏராளமாக நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் கோடிகள் சம்பாதிப்பார்கள். அதே போல சினிமா நடிகர்கள், நடிகைகள் நிறைய சம்பாதிப்பவர்கள் நான் இது போன்றவர்களுக்கு catering செய்து இருப்பதால் அவர்களது உண்மையான மனநிலை தெரியும். என்ன தான் இருந்தாலும், அரசியல்வாதி தானே, சமூக விரோதிதானே, கூத்தாடிகள் தானே என்பது போன்ற சமூக மனப்பான்மை அவர்களுக்கு தரும் சங்கடம், வருத்தம் அதிகம். அதனால் தான் அவர்களில் பெரும்பாலோர் அடுத்த generation அந்த தொழிலுக்கு வரக் கூடாது என்றே நினைப்பார்கள், எனக்கு தெரிந்து அரசியலில் இருப்பவர்கள், invest செய்வதற்கு ஒரு நல்ல இடம் வியாபாரம் சொல்லுங்கள் என்று கேட்பார்கள். லாபத்திற்கு அல்ல தான் ஒரு வியாபாரி என்று காட்டிக் கொள்ள. இவை எல்லாம் எதை காட்டுகிறது

என்றால் என்ன இருந்தாலும், எவ்வளவு இருந்தாலும் அது ஒரு பண்புடன் இணைப்படவில்லை என்றால், அதனால் நமக்கு ஆனந்தம் கிடைக்காது என்பது தான். இறைவனையும், மனிதர்களையும், செயல்களையும் இணைக்கும் ஆற்றல் பண்பு. அது உயர்சித்தம் , அல்லது அதிமன பண்புகளாக இருந்தால் இன்னும் நல்லது.

அடுத்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய பொதுப்புத்தி அறியாமையில் இருந்து வெளியே வந்து அறிவை, ஞானத்தை பெறுவதே ஆனந்தம் பெறும் வழி என்பது தான். அறிவை, ஞானத்தை பெறுவது என்பது ஒவ்வொன்றிலும், குறிப்பாக, நாம் துன்பம், ஏமாற்றம், சோகம், வலி என்று உணரும் விஷயங்களுக்கு பின்னால் உள்ள இறைவன் தரவிருக்கும் ஞானத்தை பார்ப்பது ஆனந்தத்தை பெரும் வழி. நாம் இவற்றுக்கான காரணங்களை, நம் பழைய அனுபவங்களுடன் பொருத்தி பார்த்தே புரிந்துக் கொள்கிறோம். அதாவது நம் அறியாமையில் இருந்து அறிவை தேடுகிறோம். உள்ளுறை ஞானத்தை கேட்பதில்லை. அதனால் நாம் நமக்கு வர வேண்டிய உயர் ஞானத்தை உயர் மனப்பான்மையை மறுக்கிறோம். நம் மனமே உயர்ந்தது அதுவே எல்லாவற்றையும் நடத்துகிறது நாம் பெற்ற அறிவே உயர்ந்தது என்று நினைத்தே எதையும் செய்கிறோம். தோல்விக்காக, துன்பத்திற்காக என்று எதையும் நாம் திட்டமிட்டு செய்வதில்லை. என்றாலும் அப்படி வருகிறது என்றால் நாம் ஏதோ ஒரு அறியாமையில் இருக்கிறோம் என்று பொருள். குறைந்த பட்சம் அந்த செயலில் நமக்கு குறையாக இருந்த மனப்பான்மை, திறமை, திறன், ஆற்றல் ஆகியவையாவது நமக்கு புரிய வேண்டும். பின் அதற்குத் தேவைப்படும் சூட்சும விஷயங்கள், சூழல், பண்புகள், ஆர்வம் போன்ற விஷயங்களில் இருந்த குறை புரிய வேண்டும். அதற்காக நாம் வெளிப்படுத்திய உழைப்பு, காட்டிய பண்புகள் ஆகியவற்றில் இருந்த குறை புரிய வேண்டும். இவையெல்லாம் நமக்கு மிகப் பெரிய அறிவை, ஞானத்தை கொடுக்கும். இனி பெரும்பாலும் தோல்வி என்பதே இல்லை என்னும் அளவிற்கு செயல்பட முடியும்.  நம் மனம், சுயநலம், கயமை, எதிர்பார்ப்பு போன்ற நோக்கத்துடன் வேலை செய்யும் போது நன்றாக கவனித்து பார்த்தால், நம் வரையறை தடை, அறியாமை ஆகியவற்றின் மேல் கவனமாக இருப்பது தெரியும். அதற்கு எதிரான வகைகளில் இருந்து சுயநலத்திற்கு தேவையானதை பிரித்து எடுத்துக் கொள்ளும் திறமை அதற்கு இருப்பது புரியும். மனதின் அந்த திறனை கவனத்துடன் அறிவை பிரித்து எடுக்க பயன்படுத்த வேண்டும். ஒரு செயல் வெற்றி பெற, அல்லது அதன் மூலம் நாம் பெற விரும்பும் ஆனந்தத்தை பெற தேவையான பண்புகள் எது, அது எந்த சட்டப்படி இயங்குகிறது அதன் பின் உள்ள சத்தியம் என்ன, அந்த

சத்தியத்திற்கு காரணமானவர் யார் என்பது எல்லாம் புரிந்தால் நாம் யார் என்பது நமக்கு புரியும். நம் அறிவின் நிலை, தளம் நமக்கு புரியும். அதை உயர்த்துவது அறியாமையில் இருந்து வெளியே வருவது. அது பரிணாமத்தில் முன்னேறுவது என்றால், அது வாழ்வில் பணமாக, வசதியாக, அந்தஸ்தாக, புகழாக, நமக்கு ஆனந்தம் அளிக்கும் ஏதோ ஒன்றாக வெளிப்படும். அப்படி இல்லாமல் அதாவது இறைவன் விரும்பும் பண்புகள் மூலம் ஒன்றை பார்க்காமல் நம் உணர்வு, உணர்ச்சி, அதன் அனுபவம் மூலம் மட்டுமே பார்த்தால், நாம் அறியாமையிலேயே இருப்போம். அது வலி, துன்பம் ஆகியவற்றைத் தரும் போது இறைவன் மேல் நம்பிக்கை இழந்து மேலும் மேலும் நம்மை நம்ப ஆரம்பிப்போம். அல்லது வெறுப்பான மனநிலைக்கு வந்து விடுவோம். அது மேலும் மேலும் நம்மை துன்பத்திற்கே தள்ளும். இறைவன் நம்மை படைத்தது ஆனந்தமடையவே என்னும் போது அதன் பார்வையில், செயல்கள், அவற்றின் மூலம் வரும் பலன்கள்,, அதற்காக செயல்படும் சட்டங்கள், அவற்றின் வெளிப்பாடுகள், நம் வாழ்வில் அவற்றின் தாக்கம், ஆகியவற்றை conscious ஆக கவனிப்பது அறியாமையில் இருந்து வெளியே வந்து வாழ்வுக்கான அதன் ஆனந்தத்திற்கான ஞானத்தை பெறுவது.

அடுத்தது சமுதாயமும் நம்மை போலவே இறைவனால் படைக்கப்பட்ட ஒரு ஜீவனுள்ள படைப்பு, அதனுடன் நம் தொடர்பு, அதன் symbols , சுட்டிக்காட்டும் அடையாளங்கள் ஆகியவற்றை கவனிக்கும் அளவு ஒன்றுதல் ஆனந்தத்தை தரும் பொதுப்புத்தி. இது பற்றி சமூகம் அதிர்ஷ்ட சாகரம் என்னும் புத்தகம் அதிகமாக விளக்குகிறது.

சமூகம் என்பது ஜீவனுள்ளது நம்முடன் இரண்டர கலந்து இருக்கிறது என்பதை சற்று கவனித்தால் புரியும். காலையில் பல் தேய்க்க எந்த paste உபயோகப்படுத்த வேண்டும் என்பதிலிருந்து இரவு உறங்க செல்லும் வரை அனைத்தையும் அதுவே influence செய்கிறது என்பதை கவனித்து பார்த்தால் புரியும். சட்டம், முறை, பழக்கம், வழக்கம் , நாகரிகம் என்று அனைத்தின் மூலமும் சமூகம் நம்மை தொடுகிறது. சமூக சட்டத்தை மீறினால் தண்டனை கிடைக்கும் என்பது நமக்குத் தெரியும். அதே போல மீதி இடங்களிலும் அப்படி மீறும் போது நாம் பெறும் தண்டனைகள் நம் கண்ணில் படுவதில்லை. பண்புகள் முதல் நாகரிகம் வரை நாம் அதை மீறும் போது, அல்லது அதனுடன் ஒட்டிச் செல்லாத போது நாம் விலக்கப்படுகிறோம். அதே போல அது நம்மிடையே நெருங்கும் இடங்களை, முன்னேற்றத்திற்கான இடங்களை அல்லது எதிர்காலத்தைப் பற்றி அது காட்டும் symbol -களை கவனித்து அதனுடன் ஒன்றினால் அதிர்ஷடம் வரும். ஆனந்தம் வரும். இன்று

சமுதாயம் தனி மனித முன்னேற்றதிற்கு பல வகைகளில் பாடுபடுகிறது. அதற்கான சமூகத்தின் நல்லெண்ணம் சம்பாதிக்கும் வாய்ப்புகள் அதிகமாவதைக் காட்டுகிறது. அதாவது பணத்தை நம் ஆனந்தத்திற்கு சேவை செய்ய வைக்கிறது. இன்று எவர் முயன்றாலும் எந்த தொழிலும் செய்ய முடியும். Innovation , Creativity , Individuality-க்கு அதிக மரியாதை வருகிறது. முன் போன்ற கடினமான சூழல் படிப்பிற்கோ, வியாபாரத்திற்கோ இல்லை என்பதெல்லாம் எதை காட்டுகிறது என்றால், நாம் முயன்றால் எளிதாக எதையும் பெற முடியும் என்பதையே. விலங்கு போல நாடோடியாக திரிந்த மனிதனை ஊரும் உறவுமாக வாழ வைத்தது. வேட்டையாடி பிழைத்தவனுக்கு விவசாயம் செய்ய உதவி, வீட்டிற்கே காய், கனி தானியமாக வந்தது, உழைப்பின் பலனை பகிர்ந்துக் கொள்ள பண்ட மாற்று வந்தது என்று ஆரம்பித்து மருத்துவம், கல்வி, door delivery என்று சமுதாயம் மனிதனின் ஆனந்தத்திற்கு கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுவது போல படுகிறது. அந்தந்த காலகட்டத்தில் அதை கவனித்து அத்துடன் ஒன்றுவது பொதுப்புத்தி.

உதாரணமாக இருபதாம் நூற்றாண்டு automation-க்கு அடிபோட்டு உச்சத்தை அடைந்தது. அந்த நேரத்தில் தனி மனித, அல்லது தொழிலாளர் எதிர்ப்புக்கு பயந்து automate செய்யாதவர்கள் அனைவரும் பின் தங்கினர் அல்லது அழிந்தனர். automate செய்தவர்கள் தப்பினர். இந்தியாவில் 1960-முதல் 2000 வரை இருந்த ஆட்டோமொபைல் கம்பெனிகள் textile நிறுவனங்கள், ஆகியவற்றின் நிலையை இப்போது ஆராய்ந்து பார்த்தால் இது புரியும். அதே போல இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு internet technology வளர்ச்சிக்கானது. அதோடு ஒன்றியவர்கள் அபரிமிதமாக வளர்கிறார்கள். அதோடு கூட இந்த வளர்ச்சியின் காரணமாக வந்த openness , transparency , ரகசியம் மூடி மறைக்க முடியாதது, பிறரின் perfection செம்மை தெரிவது, productivity என்று எல்லாமே மாறி விட்டது. வெளிப்படையாகி விட்டது. அதை புரிந்து நாமும், அடக்குமுறை, ரகசியம், குறுகிய மனப்பான்மை, ஏமாற்று வேலைகள் இனி உதவாது என்று புரிந்து மாற வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக சமூகம், உலகம் பண்புகளுக்கு மாறுவது Supramental Force , இறங்கி வருவதால் என்று புரிய வேண்டும், முடிந்த வரை அத்தகைய பண்புகளுடன் ஒன்ற வேண்டும். இப்படி சமுதாயம் அரசு சட்டம், ஜட உலக சட்டம் gross laws , subtle laws சூட்சும சட்டங்கள் என்று பலவற்றை நமக்கு காட்டிக் கொண்டு இருக்கிறது. மனித முன்னேற்றதிற்கு கட்டுப்பட்டு நடந்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் நாம் நம் சுபாவத்திற்கு கட்டுப்பட்டு அது தரும் ஆனந்தத்தை அனுபவிக்க முடியாமல் இருக்கிறோம். சமூகத்தின் இந்த நடப்பு அதற்கான அதிகாரம்

நமது ஆவது, அதிர்ஷ்டம் சாகரம் என்கிறார். இன்று நமக்கு கிடைத்துள்ள தனி மனித சுதந்திரம் அதற்கு அறிகுறி. அது நம் சுபாவத்தை சுதந்திரத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. நம் சுதந்திரம் என்பது நம் மேல் நம்பிக்கை அது தன்னம்பிக்கை. அந்த தன்னம்பிக்கை நம் திறமை, அதன் பண்புகள் மேல் வருவதால் வருகிறது. நம் திறமை பண்புகள் மேல் சமூகம் நம்பிக்கை வைக்கும் போது , அது பல மடங்கு பலனைத் தருகிறது. சமூகம் தனி மனிதனை நம்பும் அளவிற்கு அவன் வாழ்வு மாறும்.

நம்மை சுற்றி உள்ளவர்களை கவனித்தாலே, தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், டியூஷன் எடுப்பவர்கள், பழைய பொருட்கள் எடுப்பவர்கள் முதல், டைலர்கள் என்று எவரைப் பார்த்தாலும் அந்த ஏரியாவில் நம்பிக்கையை பெற்றவர்களே அதிகம் சம்பாதிக்கிறார்கள். Bank , Insurance , Mutual Fund போன்றவற்றை, கவனித்தால் customer நம்பிக்கை பெற்றவர்களே வளர்கிறார்கள். அதாவது நம் நம்பிக்கை சமுதாயத்தின் நம்பிக்கை ஆகும் போது, அது அபரிமிதமாக வளர்ந்து ஆனந்தத்தை தருகிறது.

என் வாழ்வில் இருந்து ஒரு உதாரணத்தை கூட சென்றக் கூடலில் கூறினேன் என்று நினைக்கிறேன்.

என் கம்பெனி 2008-இல் ஆரம்பித்து கர்மயோகியின் Blessing-குக்காக மைலில் எழுதி கேட்ட போது -சொன்ன சொல் தவறமாட்டேன், project hanover செய்வது முதல், பணப் பட்டுவாடா வரை என்பதை கொள்கையாக எடுத்துக் கொள் என்றார். அப்போது அதை ஏன் சொன்னார் என்பது புரியவில்லை. அதனால் பண விஷயத்தில் ரொம்பவும் பயப்படுவேன். risk எடுக்க மாட்டேன். கடன் எனபது கிடையாது. Credit card கூட வாங்கவில்லை. காரைக் கூட பணம் சேமித்து தான் வாங்கினேன். loan கிடையாது. அப்படி இருந்த எனக்கு 2015-க்கு பிறகு credit / loan போன்றவை இருந்தால் தான் business செய்ய முடியும் என்ற நிலை வந்தது. எப்படி கேட்பது என்று தெரியாத நிலையில், அதுவும் கையில் project -ஐ வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாத நிலையில் ஒரு கம்பெனி தானாகவே முன் வந்து யாருக்கும் 1 லட்சம் credit கொடுக்க யோசிக்கும் ஒரு கம்பெனி அதற்கான Blank cheque பல வாங்கும் கம்பெனி எந்த வித condition-னும் இல்லாமல் 75 லட்ஷம் வரை credit கொடுக்க முன் வந்தது. அது நான் அது வரை நம்பிக்கை வைத்த ஒரு பண்பின் மேல் சமுதாயம் வைத்த நம்பிக்கை. இவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை. கவனிப்பது பொதுப்புத்தி.

இதை நம்முள் , நம் மனநிலையில் எப்படி கொண்டு வருவது என்பதற்கான process -ஐயும் சொல்கிறார். நம் மனம் இரு பகுதிகளில் ஆனது. ஒன்று அறிவு, knowledge , இன்னொன்று will - உறுதி. இன்று இப்போது கேட்பதை , அறிவு ஏற்றுக் கொண்டால், உணர்வு அதை உண்மை என்று நம்பினால், மனம் அதை செய்ய உறுதி எடுக்கும். மனது மட்டுமோ, அறிவு மட்டுமோ ஏற்றுக் கொண்டால் அது opnion . அபிப்ராயமாக மாறி விடும். இதை செய்ய வேண்டும் என்று உணர்வில் தோன்றினால், அதை மனம் முழுதுமாக ஏற்கும். அது முடிவு. decision. இது மேல் மனதை கட்டுப்படுத்துவது. இதை ஆழமாக ஏற்பது, முன்னேற்றத்தை, ஆனந்தத்தை மட்டுமே நினைத்து focused ஆக ஏற்பது ஆழ் மனதிற்கு செல்வது. அப்போது அந்த முடிவின் பெயர் determination தீர்மானம். அந்த தீர்மானம் இந்த எட்டு பொதுபுத்தியையும் நமக்கு பிடிபட வைக்கும்.

அடுத்த அத்தியாயத்தைப் பற்றி அடுத்த கூடலில் பேசலாம்.

======================